IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. 12/2019 P.W.3 - PALANIRAJ DATE : 26.08.2021

வா.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

யார் பெயரில் கடன் வழங்கப்பட்டுள்ளது என்றால் லில்லி பாய் மற்றும் பக்தவச்சலம் ஆகியோர் பெயரில் கடன் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் பெற்ற கடன் வீடு கட்டுவதற்காக பத்திரங்களை அடமானம் வைத்து பெற்ற கடனாகும். அவர்கள் அடமானம் வைத்த பத்திரத்தின் சொத்து யார் பெயரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் லில்லிபாய் பெயரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பக்தவச்சலம் கேரன்டராக கையொப்பம் செய்துள்ளார் என்றால் அவர் கடனாளியாகவும் கேரன்டராகவும் சேர்த்து தான் கையொப்பம் செய்துள்ளார். அடமானப்பத்திரம் சொத்தின் உரிமையாளர் மட்டும் தான் எழுதிக்கொடுக்க இயலும் என்றால் சரிதான். கடனை திருப்பி செலுத்தும் திறன் உள்ள நபர் வேண்டும் என்பதால் அவ்வாறு திறன் உள்ள நபரை கூட்டு கடனாளியாகவோ அல்லது கேரன்டராகவோ சேர்த்து கடன் வழங்குவோம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 3 ஆவணங்களிலும் பக்தவச்சலம் தான் கடனை திருப்பி செலுத்தினார் என்பதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். பக்தவச்சலம் எங்கள் நிறுவனத்திற்கு கடனை அவருடைய வங்கி கணக்கில் செலுத்தியதாகவோ அல்லது கேட்பு காசோலை மூலம் செலுத்தியதாகவோ எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பக்தவச்சலம் கடன் செலுத்தியதாக எந்த ஆவணமும் இல்லை என்பதால் லில்லி பாய் தான கடன் தொகைகளை பைசல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.